செ.வெ.எண்.21 நாள்: 11.05.2019

**தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் பணியாற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பினை ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பொது பார்வையாளர் திரு.சுரேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்கள்.**

---

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் பணியாற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று (11.05.2019) நடைபெற்றது. ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பொது பார்வையாளர் திரு.சுரேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர், எட்டயபுரம் சி.கே.டி.மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பினை பார்வையிட்டனர்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது:-

வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு நாடாளுமன்ற பொதுத்தேர்தல் மற்றும் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பது குறித்து பல்வேறு கட்டங்களாக பயிற்சிகள் அளிக்கப்பட்டது. தற்போது ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் பணியாற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது. தற்போது தங்களுக்கு இது ஐந்தாம் கட்ட பயிற்சியாக நடைபெற்று வருகிறது. இதற்கு முன்பாக நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தல் மற்றும் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் பல்வேறு சிறு சிறு தவறுகள் நடைபெற்று வருகிறது. நடைபெறவுள்ள சட்டமன்ற இடைத்தேர்தலில் எந்த ஒரு தவறுக்கும் இடம் தராமல் தாங்கள் சிறப்பாக பணியாற்ற வேண்டும். குறிப்பாக வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவர்கள் மட்டும் வாக்குப்பதிவுகளை செய்ய அனுமதிக்க வேண்டும். வாக்குப்பதிவின்போது உங்களுக்கு சந்தேகங்கள் ஏதும் இருந்தால் மண்டல அலுவலர்கள் அல்லது நுண் பார்வையாளர்களிடம் கேட்டு அதன்படி பணியாற்ற வேண்டும்.

தாங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலும் மிகவும் முக்கியமானதாக இருக்கும். குறிப்பாக மாதிரி வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரத்தில் உள்ள சிலிப்களை சீல் வைக்க வேண்டும். மேலும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவான வாக்குகளை தவறாமல் அழிக்க வேண்டும். இப்பணிகளை தாங்கள் கவனத்துடன் முறையாக செய்ய வேண்டும். வாக்குசாவடி மையத்தில் வாக்குசாவடி அலுவலர்களின் தவறுகளினால் மறுவாக்குப்பதிவு நடைபெறும் நிலை ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களின்மீது இந்திய தேர்தல் ஆணையம் விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை கூடுதல் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், உதவி ஆணையர் (கலால்) / ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.சுகுமார், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்/வட்டாட்சியர் திரு.மலர்தேவன் மற்றும் வாக்குசாவடி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.